


# விதை நெல்லைச் சேமித்தல்



விவசாயத் திணைக்களத்தின் பிரசுரம்

# விதைகளைச் சேமிப்பதற்கான ஆலோசனைகள்


பாட விடய ஆலோசனைக் குழு
கலாநிதி எஸ்.எல்.வீரசேன
டபிள்யூ.பீ.மதவன்ஆரச்சி

தமிழாக்கம்
எஸ்.பெரியசாமி

சித்திரங்கள்
நளின் பாலசூரிய

தயாரிப்பு
கட்புல, செவிப்புல நிலையம்
கண்ணோறுவை

அட்டைப்படம்
மில்ரன் குணசேன

கணனி வடிவமைப்பு
யோ.கு.கிருபைநாதன்

வெளியீடு
பணிப்பாளர்
விரிவாக்கமும், பயிற்சியும்
த.பெ.இல. 18
விவசாயத் திணைக்களம்
பேராதனை

அச்சுப் பதிவு
விவசாய அச்சகம், கண்ணோறுவை

விவசாயத் திணைக்களம்
பேராதனை

2016

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சேமிப்பதற்கு விதைகளை ஆயத்தம் செய்தல் | ..... | 4 |
| விதைகளைச் சேமிக்க களஞ்சியங்களை ஆயத்தம் செய்தல் | ..... | 5 |
| சேமித்து வைக்கப்பட்டுள்ள விதைகளின் தரம் குறைவதற்கான காரணிகள் | ..... | 7 |
| களஞ்சியங்களைப் பராமரித்தல் | ..... | 9 |
| விதைக் களஞ்சியங்களில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தல் | ..... | 10 |
| எலிகளைக் கட்டுப்படுத்தல் | ..... | 11 |

## விதைகளைச் சேமிப்பதற்கான ஆலோசனைகள்

சிறந்த முளைதிறன் கொண்ட, வீரியமான விதைகளே, பயிர்ச்செய்கைக்கான அடிப்படைத் தேவையாகும். விதைகளின் தரத்திலேயே பயிர்ச்செய்கையின் வெற்றி தங்கியுள்ளது.

விதைகளை நடுகை செய்து, அவற்றை அறுவடை செய்யும் வரையும், அறுவடை செய்யப்பட்ட விதைகளைப் பதனிட்டு சேமித்து வைத்திருந்து மீண்டும் நடுவதற்குப் பயன்படுத்தும் வரை விதைகளிற்கும், அதற்கு அருகிலுள்ள சூழற் காரணிகளிலுமே விதைகளின் தரம் தங்கியுள்ளது. எனவே விதை உற்பத்தியைப் போன்றே முறையாகச் சேமித்து வைப்பதும் விதை உற்பத்தியில் மிக முக்கியமானதாகும்.



அநேகமான விவசாயிகள் பெரும் சிரமத்துடனும், கவனத்துடனும் பயிர் செய்தாலும், பெறப்பட்ட விளைவை முறையாகப் பதனிட்டு, உகந்த முறையில் சேமித்து வைப்பதில்லை. இதனால் விதைகளின் முளைதிறன் விரைவாக குறைந்து செல்கின்றது. அயன மண்டல நாடான இலங்கையில் நிலவும் உயர் வெப்பநிலை, உயர் சாரீரப்பதன் என்பன விதைகளை சேமித்து வைப்பதற்கு உகந்தவை அல்ல. இதனால் சேமித்து வைக்கப்படும் விதைகளின் வாழ்தகவைப் பாதுகாப்பது மேலும் சிரமமானதாய் உள்ளது.

எனவே அறுவடை செய்தது முதல், அதனை மீண்டும் நடுகை செய்யும் வரை விதையின் இயல்புகள் மாறாதவாறு அவற்றை சேமித்து வைப்பது மிக முக்கியமானதாகும்.

சேமிப்பதற்கு விதைகளை ஆயத்தம் செய்தல்


- விதைகளை நன்கு சுத்தம் செய்யவும். காற்றின் மூலம் அல்லது சல்லடையைப் பயன்படுத்தி களை விதைகள், வேறு பொருட்கள், கல், மணல் துண்டாக்கப்பட்ட விதைகள், மேற்றோல் என்பனவற்றை அகற்றவும்.
- சுத்தப்படுத்திய விதைகளை நன்கு உலர்த்தி சுத்தமான பைகளில் இடவும்.
- ஒரு முறை பாவித்த கொள்கலன்களை (சாக்கு போன்றன) உபயோகிப்பதாயின் அவற்றை நன்கு சுத்தம் செய்யவும்.





விதைகளைச் சேமிக்க களஞ்சியங்களை ஆயத்தம் செய்தல்

- களஞ்சியத்தைச் சுற்றியுள்ள இடத்தை நன்கு சுத்தம் செய்யவும். சுற்றாடலில் காணப்படும் புற்கள் போன்றவற்றை வெட்டி அகற்றவும். கட்டிடங்களுக்கு அண்மையில் உள்ள மரக்கிளைகளையும் வெட்டி அகற்றவும்.



- களஞ்சியத்தின் உள்ளே காணப்படும் வேறு பொருட்கள், தூசி, உடைந்த தானியங்கள் என்பனவற்றை அகற்றி எரித்து விடவும்.



- மழை நீரிலிருந்து விதைகளைப் பாதுகாக்க கூரையை ஒழுக்கில்லாது அமைக்கவும்.





- சீமெந்து, களி, அல்லது சுண்ணாம்புக் கலைவையப் பயன்படுத்திக் களஞ்சியத்தின் சுவர்களில் அல்லது தரையில் காணப்படும் எல்லா துளைகளையும் அடைத்து விடவும்.

- களஞ்சியத்தின் உள்ளேயும், வெளிப்புறமும் வெண்ணிற சுண்ணாம்பு அல்லது வர்ணம் பூசுவது உகந்தது. வெண்ணிறம் ஒளியை உறிஞ்சுவதில்லை. இதனால் களஞ்சியத்தின் உள்ளே வெப்பம் உயருவது தடுக்கப்படும்.



- களஞ்சியத்தில் காற்றோட்டத்திற்காக அமைக்கப்பட்டிருக்கும் ஜன்னல் களைக் கம்பி வலையால் மூடவும்.
- விதைப் பைகளை அடுக்கி வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் மரச்சட்டங்கள் அல்லது மரங்கள் என்பனவற்றைச் சுத்தம் செய்யவும்.

சேமித்து வைக்கப்பட்டுள்ள விதைகளின் தரம் குறைவதற்கான காரணிகள்

அதிக வெப்பநிலை

- களஞ்சியத்தின் உள்ளே வெப்பநிலை அதிகரித்தல். சேமித்து வைக்கப்பட்டுள்ள விதைகள் சுவாசிப்பதால் உற்பத்தியாகும் வெப்பநிலையாலும், காற்றோட்டம் திருப்திகரமாக இல்லாத போதும் களஞ்சியத்தின் வெப்பநிலை அதிகரிக்கும்.

அதிக ஈரப்பதன்

- வளிமண்டலத்தில் காணப்படும் நீராவியை உறிஞ்சுவதால் அல்லது விதைப் பைகளைத் தரையின் மேல் வைக்கும் போது, தரையிலுள்ள நீரை உறிஞ்சுவதால் விதைகளில் உள்ள ஈரப்பதன் அதிகமாகும். இதனால் வாழ்தகவு இழக்கப்படாமல் விதைகளை நீண்ட நாட்களுக்கு சேமித்து வைத்திருக்க முடியாது.


நுண்ணங்கிகள்

- பூஞ்சணங்கள் போன்ற நுண்ணுயிர்களின் தொற்றலினால் விதைகளின் தரம் குறையும்.

  விசேடமாக விதைகளில் ஈரப்பதன் அதிகமாக இருக்கும் போது பூஞ்சணங்களின் தொற்றலும் அதிகமாகும்.


எலிகள், குருவிகள் போன்ற பீடைகள்

- எலிகள், குருவிகள் என்பன விதைகளை உண்ணும். இதைத் தவிர, இப்பிராணிகளின் கழிவுகள் விதைகளுடன் கலப்பதாலும் விதைகளின் தரம் குறையும்.





களஞ்சியங்களைப் பராமரித்தல்

- விதைகளுக்குச் சிறந்த காற்றோட்டம் கிடைப்பதற்காக, சிறப்பான காலநிலை நிலவும் போது காற்றோட்டத்திற்காக ஜன்னல்களைத் திறந்து விடவும்.



- களஞ்சியத்தின் உள்ளே நீராவி செல்வதைத் தடுக்க மழை நாட்களில் ஜன்னல்களை மூடி விடவும்.
- பூச்சிகளினால் விதைகள் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்ள தினந்தோறும் களஞ்சியத்தைப் பரிசோதிக்கவும்.
- களஞ்சியத்தில் கீழே விழுந்து கிடக்கும் விதைகளையும், ஏனைய கழிவுகளையும் அகற்றி, தரையை மிகவும் சுத்தமாக வைத்திருக்கவும்.
- எப்போதும் களஞ்சியத்தின் உள்ளே சிறப்பான காற்றோட்டம் இருக்கத்தக்கவாறு, அதனை குளிராக வைத்திருக்க முயற்சிக்கவும்.


- மரச்சட்டங்களின் மீதோ அல்லது மரத்தடிகளின் மீது மாத்திரம் விதைப் பைகளை வைக்கவும். சுவரில் தொட்டுக்கொண்டிருக்கத் தக்கவாறு விதைப் பைகளை அடுக்கி வைக்க வேண்டாம்.

விதைக் களஞ்சியங்களில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தல்

- அடிக்கடி விதைப்பைகளை அவதானிக்கவும். பூச்சிகளின் தாக்கம் காணப்படும் மூடைகள் இருக்குமாயின் அவற்றை வெளியே எடுத்துச் சென்று, சுத்தமாக்கி உலர்த்திச் சேமிக்கவும்.
- களஞ்சியத்தின் உள்ளே பறக்கும் பூச்சிகள் உள்ளனவா என எப்போதும் அவதானமாக இருக்கவும்.
- பீடைகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம், சிபாரிசு செய்யப்பட்ட பீடைநாசினியொன்றைப் பயன்படுத்தவும்.


எலிகளைக் கட்டுப்படுத்தல்

- நீர் இல்லாது எலிகளால் உயிர்வாழ முடியாது. நீரைத் தேடி எலிகள் களஞ்சியத்திற்கு வெளியே செல்ல வேண்டியேற்படும். களஞ்சியத்திற்கு எலிகள் உட்புகும் வழிகளைத் தடை செய்வதால் அவற்றை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த முடியும். இதற்குக் கீழே படத்தில் உள்ளவாறு, சரிவான தகடுகளை அமைப்பதால் எலிகள் ஏற முடியாது.




- களஞ்சியத்தைச் சுற்றியுள்ள மரங்களின் கிளைகளை வெட்டி விடவும்.

- எலி வளைகள் உள்ளனவா என்பதைப் பரிசோதித்து அவற்றை மூடி விடவும்.




மிகவும் சிரமப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட விதைகளை அடுத்த போகம் வரை நன்றாக சேமித்து வைக்க எப்போதும்

- விதைகளை உலர்வாக வைக்கவும்.
- களஞ்சியங்களை குளிராக வைத்திருக்கவும்.
- பூச்சிகள், எலிகள், பறவைகளிடம் இருந்து விதைகளைப் பாதுகாக்கவும்.

விவசாயத் திணைக்களம்

பேராதனை

விவசாய, [redacted] அமைச்சு

[redacted]

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்